### கடலூர் மேற்கு – நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் – பா.ம.க. – அ.தி.மு.க. – பா.ஜ.க. – த.வெ.க. –

# தே.மு.தி.க. - அ.ம.மு.க. - நாம் தமிழர் கட்சிகளிலிருந்து 6000 பேர் விலகி கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!







**கடலூர், பிப்.23–**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலியில் நெய்வேலி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சபா.இராஜேந்திரன் ஏற்பாட்டில் பா.ம.க. – அ.தி.மு.க. – பா.ஜ.க. – த.வெ.க. – தே.மு.தி.க. – அ.ம.மு.க. – நாம் தமிழர் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 6000க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (21-02-2025) மாலை, நெய்வேலி நகரம், சிபிஎஸ் அண்ணா திடலில், கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சபா.இராஜேந்திரன் ஏற்பாட்டில் பா.ம.க. - அ.தி.மு.க. - பா.ஜ.க. - த.வெ.க. - தே.மு.தி.க. - அ.ம.மு.க. - நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 6000க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் - உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.கழகத்தில் இணைந்தவர்கள் விவரம்:-

பா.ம.க.வைச் சேர்ந்த மாவட்ட துணைச் செயலாளர் செம்மேடு அருள் ஜோதி, பசுமை தாயகத்தைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் காட்டாண்டிகுப்பம் செந்தில்முருகன், மாவட்ட தலைவர் இந்திராநகர் சிவதானம், கணேசன், மருத்துவ அணியைச் சேர்ந்த நடுக்குப்பம் பாப்பன் கொல்லை டாக்டர் செந்தில்குமார், ஒருங்கிணைப்பாளர் செங்கடாம்பேட்டை சீனிவாசன், செடுத்தான்குப்பம் பாலமுருகன், பாரதி, பாரதி நகர் சதீஷ், நெய்வேலி பிரகாஷ், சிறுவத்தூர் அருண், திருவாமூர் பார்த்தசாரதி, அழகப்பசமுத்திரம் வீரமணி, முத்தாண்டிகுப்பம் சுதாகர், காங்கேயன்குப்பம் கலியபெருமாள், வீரசிங்கன்குப்பம் எலவத்தடி ராஜேந்திரன், சிறுதொண்டமாதேவி சிவக்குமார், வசந்தகுமார், பாவைக்குளம் ராஜேஷ்குமார், மருங்கூர்தோப்பு கொல்லை வரதன், முத்தரசன்குப்பம் மணிமேட்டுக்குப்பம் புதுப்பாளையம் விவேக், கீழூர் கோவில் குப்பம் தமிழ் - தேமுதிக ஒன்றிய பொருளாளர் மேலிருப்பு அன்பழகன், காட்டுக்கூடலூர் மணிமோழி, நடுக்காட்டுபாளையம் சிலம்பரசன், கீழ்மாம்பட்டு பாலாஜி - பாஜகவைச் சேர்ந்த மாவட்ட துணைத் தலைவர் சமட்டிக்குப்பம் த.சுப்பிரமணி, மாவட்ட இளைஞர் அணித் தலைவர் அப்பியம் பேட்டை ஆனந்தராஜ், ஓபிசி அணி மாவட்ட பொருளாளர் காடாம்புலியூர் கார்த்திகேயன், மாளிகம்பட்டு ஆண்டிக்குப்பம் சரவணன், காட்டுப்பாளையம் சத்திய மூர்த்தி - அ.தி.மு.க.வைச் சேர்ந்த புறங்கணி சதீஷ், மேல்மாம்பட்டு கருணாநிதி, ஏரிப்பாளையம் பார்த்தசாரதி, மோகன், வடக்குத்து செந்தாமரைக்கண்ணன், பெருமாத்தூர் பாலாஜி, அன்னதானம் பேட்டை விஜய், ராகுல், கானஞ்சாவடி வேலு, பத்திரக்கோட்டை தெய்வமூர்த்தி, கிளைச் செயலாளர்கள் கருக்கை உக்கர மூர்த்தி, சங்கர், செரத்தங்கழி பாலகிருஷ்ணன், சந்தைவெளிப்பேட்டை அழகேசன், நெய்வேலி மணிகண்டன், அழகப்பசமுத்திரம் டி.சுந்தரம் - அமமுக ஒன்றியச் செயலாளர் சிலம்பிநாதன்பேட்டை கலைச்செல்வன் - நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த நெய்வேலி ஈஸ்டர் - தமிழக வெற்றிக் கழகம் கட்சியைச் சேர்ந்த நெய்வேலி மணிவாசகம், காடாம்புலியூர் சந்தோஷ்குமார், உள்ளிட்ட 6000க்கும் மேற்பட்ட பா.ம.க. - அ.தி.மு.க. - பா.ஜ.க. - த.வெ.க. - தே.மு.தி.க. - அ.ம.மு.க. - நாம் தமிழர் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் - உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி, கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன், நெய்வேலி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் சர்ச்சைப் பேச்சு!

# ‘பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!’

### கனிமொழி கருணாநிதி எம்.பி. ‘எக்ஸ்’ தளத்தில் பதிவு!

**சென்னை, பிப்.23–**

**குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் சர்ச்சைப் பேச்சுக்கு, ‘பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!’ எனத் தனது ‘எக்ஸ்’ வலைதளப் பக்கத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

சமீபத்தில் நடந்த 98-வது அகில பாரதிய மராத்தி சாகித்ய சம்மேளம் நிகழ்ச்சியில் பங்கேற்று ஜெகதீப் தன்கர் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், “ஒரு நிலத்தைக் கைப்பற்றுவதற்கு அதன் மொழியை அழிப்பதே சிறந்த வழி”, நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்குள் படையெடுத்தவர்கள் இதைத்தான் செய்தார்கள் என ஜெகதீப் தன்கர் பேசியுள்ளார்.




இந்த நிலையில், குடியரசுத் துணைத்தலைவர் ஜகதீப் தன்கர் சர்ச்சை பேச்சுக்கு, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தனது ‘எக்ஸ்’ வலைதளப் பக்கத்தில் ‘பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது!’ எனச் சாடியுள்ளார்.

---



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சென்னை, கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் அமைந்துள்ள Industry 4.0 தொழில் நுட்ப மையத்தில், பலவகை தொழில் நுட்பக் கல்வி விரிவுரையாளர்களுக்கு நடைபெற்று வரும் பயிற்சியினை பார்வையிட்டு, விரிவுரையாளர்களிடம் பயிற்சியின் தன்மைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் எம்.பி.விஜயகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

---




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. மூன்றாம் கட்டமாக திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு & வேலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | மாவட்ட கழக அலுவலகம், திருக்கோயிலூர் சாலை, திருவண்ணாமலை. |
| 23.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | என்.கே.பி. பார்ட்டி ஹால், போளூர் புறவழிச் சாலை, ஆரணி. |
| 26.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | வேலூர் | எல்.கே.என். மஹால், காட்பாடி – குடியாத்தம் சாலை, லத்தேரி, வேலூர் |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 21-02-2025

